**செ.கு.எண் : 73** **நாள் : 12.08.2022**

**மாண்புமிகு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி திரு கே.பழனிச்சாமி அவர்கள் நாளேடுகளில் தெரிவித்துள்ள புகார் குறித்து மாண்புமிகு வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர் அவர்களின் மறுப்பு செய்தி**

மாண்புமிகு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் யூரியா உரத்துடன் இணை பொருட்கள் சேர்த்து விற்கப்படுவதாகவும் கூட்டுறவு நிறுவனங்களில் நானோ கட்டாயப்படுத்தி விற்கப்படுவதாகவும் தெரிவித்ததுடன் மேலும் யூரியா தோட்டக்கலை பயிர்களுக்கு கலப்புரங்கள் கூடுதல் விலையில் விற்கப்படுவதாகவும் இதனால் விவசாயிகள் அதிகமாக அவதிப்படுவதாக முற்றிலும் தவறான தகவல்களை தெரிவித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அவர் தரும் அறிக்கையை யாரும் நம்பப் போவதில்லை இருந்தாலும் மக்களுக்கு அரசின் சார்பாக சரியான தகவலை தெரிவிக்க வேண்டிய கடமையும் கட்டாயமும் எனக்கு உள்ளது. 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டை எல்லா வகையிலும் குட்டி சுவராக்கிய அதிமுகவின் கல்லாபெட்டி சிங்காரம் எடப்பாடி திமுக அரசின் வளர்ச்சி திட்டங்களை தற்போது குறை சொல்கிறார். அவரது அதிமுக ஆட்சியில் விவசாயிகள் நாள் தோறும் வீதியில் இறங்கி போராடிய சூழல் நிலவியதை எல்லோரும் பார்த்தோம்.

ஆனால், விவசாயிகளின் தோழனாக விளங்கும் தி.மு.க ஆட்சிக்குவந்த, ஓராண்டு காலத்திலேயே மேற்கொண்ட பல்வேறு நல்ல முன்னெடுப்புகளால் முன்பு எப்போதும் இல்லாத சாதனையாக ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நடப்பாண்டில்5,27,00046 ஏக்கர் பரப்பளவில் டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இன்று விவசாயிகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் அதிமுக அரசு விவசாயிகளின் விரோத அதிமுக அரசு, தனது பத்தாண்டு காலத்தில் சுமார் 2 இலட்சம் மின் இணைப்புகள் மட்டும்தான் வழங்கியது. ஆனால் நம் மாநிலத்தில் விவசாய உற்பத்தியினை பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் நலனை காக்கும் வகையிலும் ஒரு லட்சம் புதிய விவசாய மின் இணைப்புகளை அறிவித்த நான்கு மாத காலத்திலேயே வழங்கி சாதனை புரிந்தது தி.மு.க அரசு.

அதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளின் போராட்டம் நின்றுநடைபெற்ற போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்றிட தோளோடு தோள் விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்தது.

விவசாயிகளின் நலனுக்கு எதிரான ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்ட திருத்த மசோதாவை முழு மூச்சாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அச்சட்டத்தினை திரும்பப்பெற வைத்தது ஒன்றிய இன்றைய எதிர்த்து அரசினை திராவிட முன்னேற்ற கழக அரசு. தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக

விவசாயிகளின் கருத்தினை அறிந்து வேளாண்–உழவர் நலத்துறைக்கு தனியாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

டெல்டா மாவட்டங்களில் 5,000 கி.மீட்டர் தூரத்தில் திமுக அரசு பொறுப்பேற்றவுடன் ரூ.90 கோடி செலவில் A மற்றும் B ஆறுகள் மற்றும் வாய்க்கால்களை தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், 1,500 கி.மீட்டர் நீளத்தில் திமுக அரசு பொறுப்பேற்றவுடன் ரூ.5 கோடி செலவில் C மற்றும் D வாய்க்கால்களை டெல்டா பாசன விவசாயிகளின் நலனுக்காக தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விவசாயிகளின் நலனில் அக்கறை இல்லாத அதிமுக ஆட்சியில் ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் தூர்வார நடவடிக்கை எடுக்காமல் தனது கல்லாவை மட்டும் நிரப்பிக் கொண்ட கல்லா பெட்டி சிங்காரம் எடப்பாடி அவர்கள், அரசின் கஜானாவை தூர்வாரி தமிழகத்தின் நிதிநிலையை அதாள பாதாளத்திற்கு கொண்டு சென்றவர் திமுக அரசை குறை கூறுகிறார். ஆட்சியில் இருந்த போது பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை ஆகிய துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திட அக்கறை காட்டிய எதிர்கட்சித் தலைவர் வேளாண்துறைக்கு ஒன்றும் செய்யவில்லை.

அதிமுக ஆட்சியில் 2019–20ல் 2,644 மெடன் மற்றும் 2020–2021ல் 3,390 மெ.டன் விதை நெல் தான் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் திமுக அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் 2021–22ல் 4,210 மெ.டன்னும், 2022–2360 வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 4,357 மெ.டன் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

குறுவை பருவ உர விநியோகம் பொறுத்தவரையில் முந்தைய அதிமுக அரசில் 2019–20ல் – 4,66,656 மெ.டன், 2020–21ல் – 5,51,463 மெ.டன் விநியோகிக்கப்பட்டது. ஆனால், விவசாயிகளின் தோழமையான இவ்வரசு 2021–22ஆம் ஆண்டு 7,50,173 மெ.டன்னும், 2022–23–ஆம் ஆண்டு 743,541 மெடன் உரம் விநியோகிக்கப்பட்டு சாதனை எய்தியது திமுக அரசு தான். எனவே அவர் அறிக்கையில் தெரிவித்தவாறு கூடுதல் விலைக்கு யூரியா மற்றும் உரங்கள் விற்பனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை காரணம் போதுமான அளவில் உரம் கையிருப்பில் உள்ளது.

**உரங்கள் கையிருப்பு**

1208.2022 அன்றைய தேதியில் உரக் கையிருப்பு

(மெட்ரிக் டன்னில்)

| | மாநில உரக்கையிருப்பு டெல்டா மாவட்டங்களின் விவரம் | டெல்டா மாவட்டங்களின் தேவைக்கான விவரம் |
|---|---|---|
| யூரியா | 58,671 | 18,628 |

| | | |
|---|---|---|
| டிஏபி | 38,762 | 10,838 |
| பொட்டாஷ் | 30,724 | 10,493 |
| காம்பளக்ஸ் | 1,52,725 | 36,983 |

குறுவை பயிரிடும் பரப்பு அதிமுக ஆட்சியில் 2019ல் 3,43,093 ஏக்கரும் 2020ல் 4.78,105 ஏக்கரும் தான் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால், திமுக ஆட்சியில் 5,27,000 ஏக்கர் அளவிற்கு குறுவை சாகுபடி பரப்பு அதிகமானது 46 ஆண்டு கால வரலாற்று சாதனை ஆகும். இச்சாதனைக்கு கழக அரசுதான் காரணம் ஆகும். கழக அரசு மேற்கொண்ட வேளாண் நடவடிக்கைகளில் முக்கியமான காரணமாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அன்றாடம் கண்ணும் கருத்துமாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முன்னுக்குக் கொண்டுவர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இந்த ஆட்சியை விடியலை நோக்கி கொண்டு செல்கின்றது. இது பொருக்காமல் கண்ணை மூடிக்கொண்டு வெற்று அறிக்கை மூலம் மக்களை ஏமாற்றத்துடிக்கிறார் எதிர்க்கட்சித்தலைவர் தான்.

விவசாயிகளிடம் நேரடியாக சென்று அவர்களுடைய இடத்தில் வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வுக் கூட்டம் நடத்துவதும், ஆலோசனைகள் வழங்குவதும் இவ்வரசு பொற்றப்பேற்றவுடன்தான் நடைபெறுகிறது. வேளாண் துறை என ஒன்று இருப்பதை வேளாண் பெருங்குடி மக்கள் உணர்வதே இவ்வாட்சியில் தான். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக 1997 கிராமங்களில் வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் ஒருங்கே கிடைத்திட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருவதால், ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் மூலமாக தமிழக அரசு விவசாயிகளை தொழில் முனைவோராக மாற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

ஒன்றிய அரசு "நானோ யூரியா" பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதின் அடிப்படையில் இப்கோ கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் நானோ யூரியா விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நானோ யூரியா பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகளை தமிழக அரசு எப்போதும் நிர்பந்திக்கவோ கட்டாயப்படுத்தவோ இல்லை.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 2016–2017ல் சம பங்காக இருந்த ஒன்றிய அரசின் பயிர்காப்பீட்டு மானியம், 2020 காரீப் பருவம் முதல் குறைக்கப்பட்டதை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார் புலம்பல் திலகம் எடப்பாடி அவர்கள். இதனால், 2016–2017ல் ரூ.566 கோடியாக இருந்த மாநில அரசின் காப்பீட்டு மானியமானது 2020–21ல் 239 சதவீதம் உயர்ந்து ரூ.1.918 கோடியாகவும், 2021–22ல் ரூ.2,500 கோடிக்கு உயர்ந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் சரி சம பங்காக பயிர் காப்பீட்டு மானியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஒன்றிய அரசின் துறை அமைச்சர் மற்றும் பாரதப்

பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு தனது மானியத்தை குறைத்ததை தட்டி கேட்காமலும் ஒன்றிய அரசின் கவனத்திற்கு கொண்டு வராமலும் வாய் மூடி மௌனியாகவும், மெத்தனமாகவும் இருந்துவிட்டு தற்போதைய அரசைக் குறை கூறுவது வேடிக்கையாக உள்ளது.

நெல்லுக்கான நுண்ணூட்டக் கலவை தமிழக அரசு வேளாண் துறையில் ஒரு கிலோவிற்கு ரூ.57 மட்டுமே. ஆனால் அதே நுண்ணூட்டக் கலவை கர்நாடக அக்ரோ கெமிக்கல்ஸ் ரூ.85/- என்ற விலைக்கு விற்கப்படுகிறது. அதேபோல நிலக்கடலைக்கான தரமான நுண்ணூட்டக் கலவை ரூ.80/- மட்டும் தமிழக அரசால் விற்கப்படுகிறது. ஆனால் எடப்பாடி குறிப்பிட்டுள்ள நுண்ணூட்டக் கலவை கர்நாடக அக்ரோ கெமிக்கல்ஸ் ரூ.240/- க்கு விற்கிறது.

| பயறு விவரம் | மல்டிபிளக்ஸ் நுண்ணூட்டத்தின் விலை (கிலோ ஒன்றிக்கு) | வேளாண்மைத் துறையால் விற்பனை செய்யப்படும் நுண்ணூட்டத்தின் விலை (கிலோ ஒன்றிக்கு) |
|---|---|---|
| நெல்லுக்கான நுண்ணூட்டம் | ரூ.85/ | ரூ.57/ |
| நிலக்கடலைக்கான நுண்ணூட்டம் | ரூ.240/ | ரூ.80/ |

மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அறிக்கையில் உள்ளது போல கர்நாடக அக்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் சில்லறை விலையை விட தமிழகத்தில் அதிகமாக விலை உள்ளது என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பான தவறான செய்தியாகும்.

உரத்தின் விலையானது ஒன்றிய அரசால் மட்டுமே இந்தியா முழுமைக்கும் நிர்ணயிக்கப்படுகிறது. நான்கு வருடம் முதலமைச்சராக இருந்த போலி விவசாயி திரு எடப்பாடி பழனிசாமிக்கு தெரியாமல் போனது ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

கடந்த 10 ஆண்டுகளாக சீர்கெட்ட நிலையில் தமிழகத்தில் நடைபெற்ற ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டினை இயல்பு நிலைக்கு கொண்டு வர கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம், நெல்தரிசில் பயறு வகைகள் சாகுபடி ஊக்குவிப்பு திட்டம், தோட்டக்கலை முதன்மை மாவட்டங்கள் மற்றும் e-NAM, டெல்டா மாவட்டங்களில் உலர்களங்கள் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார்.

அதிமுக ஆட்சியில் விவசாயிகள் நடத்திய பல்வேறு போராட்டங்களை காவல் துறை மூலம் விவசாயிகளை அடக்கி புறந்தள்ளி ஆட்சி நடத்தியவர்தான் கல்லாப் பெட்டி சிங்காரம் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். தற்போது விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டதாக அறிக்கை விடும் போலி விவசாயி, விவசாயிகளுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதை யாரும் நம்பப்போவது இல்லை. இத்தகைய உண்மைக்குப் புறம்பான அறிக்கையினை வெளியிடுவதனை இனிவரும் காலங்களிலாவது தவிர்த்து பொறுப்பான எதிர்கட்சித் தலைவராக இனியாவது நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**(எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்)**

**வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in